ஒகேனக்கல்லில் சரிந்தது நீர்வரத்து: குறைந்தது பயணிகளின் வருகை

பென்னாகரம், ஜூன் 28: ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 200 கனஅடியாக குறைந்ததால் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை குறைந்த எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

கடந்த சில நாள்களாக கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறந்துவிடப் பட்டிருந்த உபரிநீர் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நீர்வரத்து 200 கனஅடியாக குறைந்ததால் ஆற்றில் ஆங்காங்கே பாறை திட்டுக்களும், நீர்குட்டைகளும் மட்டுமே காட்சியளிக்கின்றன. அதேபோல அருவிகளிலும் தண்ணீர் குறைந்துள்ளது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை ஒகேனக்கல் வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணெய் மசாஜ் செய்துகொள்வதற்கு ஆர்வம்காட்டவில்லை. அதேசமயம் ஆற்றின் கரையோரத்திலும், பிரதான அருவி, சினி அருவியிலும் குளித்து மகிழ்ந்தனர்.

நீர்வரத்து குறைந்திருந்ததால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் பரிசலில் பயணிக்கவில்லை. ஆனாலும், சிலர் பரிசல் பயணம் செய்து அருவி பகுதியில் உள்ள பாறை குகைகளை கண்டு ரசித்தனர். சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால் மீன் விற்பனை நிலையம், வண்ண மீன்கள் காட்சியகம், முதலைகள் மறுவாழ்வு மையம், தொங்கும் பாலம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து தொடர்ந்து குறைந்துவருகிறது. இந்த நிலையில் ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைந்துள்ளதால் எண்ணெய் மசாஜ் செய்பவர்கள், பரிசல் ஓட்டிகள், உணவு சமைப்பவர்கள் என சுற்றுலாப் பயணிகளை நம்பியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாப்பாரப்பட்டியில் முதல்வர் பிறந்த நாள் விழா

தருமபுரி ஜூன் 28: தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாள் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி அரசு,தனியார் பள்ளிகளில் படித்து பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாப்பாரப்பட்டி தவெக நகரச் செயலாளர் ரமேஷ் தலைமை வகித்து பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து 52 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தவெக பென்னாகரம் ஒன்றியச் செயலாளர் ரஞ்சித், பாலக்கோடு ஒன்றியச் செயலாளர் குமார், கொள்கை பரப்பு மாவட்ட அமைப்பாளர் சந்தோஷ், பாப்பாரப்பட்டி தவெக நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

தருமபுரி: 1.08 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து

தருமபுரி/ பென்னாகரம், ஜூன் 28: தருமபுரி மாவட்டத்தில் 1,08,343 குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து ஞாயிற்றுக்கிழமை புகட்டப்பட்டது.

தருமபுரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் நடைபெற்ற முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் இரா. கவிதா தொடக்கிவைத்தார். சட்டப் பேரவை உறுப்பினர் சௌமியா அன்புமணி முன்னிலை வகித்தார். மாவட்டத்தில் 1, 08,343 குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து புகட்டப்பட்டது.

இப்பணிகளுக்காக கிராமப் பகுதியில் 964 முகாம்கள், நகர்ப்புற பகுதியில் 20 முகாம்கள் என மொத்தம் 984 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சியில் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் ராஜேந்திரன், நகராட்சி ஆணையர் வசந்தி, நகர்மன்றத் தலைவர் லட்சுமி மாது, முன்னாள் எம்எல்ஏ வெங்கடேஸ்வரன், வட்டார மருத்துவ அலுவலர் தேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தருமபுரியில் போலியோ தடுப்பு சொட்டுமருந்தை குழந்தைக்கு புகட்டி முகாமைத் தொடக்கிவைத்த மாவட்ட வருவாய் அலுவலர் இரா, கவிதா. உடன், எம்எல்ஏ சௌமியா அன்புமணி உள்ளிட்டோர்.

பென்னாகரம்...

பென்னாகரம், பாப்பாரப்பட்டி, பிக்கிலி, பெரும்பாலை, கடமடை, ஏரியூர், செல்ல முடி, ஒகேனக்கல், நாகதாசம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பொதுமக்கள் அதிகம்கூடும் இடங்கள் என 152 மையங்கள், 9 நடமாடும் தடுப்பூசி மையங்கள் மூலம் 17,556 குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து புகட்டப்பட்டது.

பென்னாகரம் பகுதிகளில் ஐந்து வயதிற்கு உள்பட்ட 18,232 குழந்தைகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் விடுபட்ட 676 குழந்தைகளின் வீடுகளுக்கு முகாம் பணியாளர்கள் நேரடியாக சென்றும், வெளியூருக்கு சென்றுள்ள பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு போலியோ தடுப்பு சொட்டுமருந்து புகட்ட நடவடிக்கை எடுக்க சுகாதாரத் துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

பென்னாகரம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமை பேரூராட்சி தலைவர் கி. வீரமணி தொடங்கிவைத்தார். முகாமில் பென்னாகரம் வட்டார மருத்துவ அலுவலர் ராமதாஸ், ஏரியூர் வட்டார மருத்துவ அலுவலர் ஜெயச்சந்திர பாபு, நாகதாசம்பட்டி சுகாதார நிலைய மருத்துவர் பூவிழியான், செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆஷா பணியாளர்கள் பங்கேற்றனர்.

ஒசூரில் 52 இடங்களில் சொட்டுமருந்து முகாம்

ஒசூர், ஜூன் 28: ஒசூர் மாநகராட்சியில் 52 இடங்களில் போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது.

ஒசூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற முகாமிற்கு மேயர் எஸ்.ஏ. சத்யா தலைமை வகித்து குழந்தைக்கு சொட்டுமருந்தை புகட்டினார். 5 வயதுக்கு உள்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து புகட்டப்பட்டது.

ஒசூர் மாநகராட்சியில் பேருந்து நிலையம், ரயில்வே சந்திப்பு, அங்கன்வாடி மையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், சிறப்பு முகாம் மையங்கள் மற்றும் நடமாடும் குழுக்கள் என 52 இடங்களில் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து புகட்டப்பட்டது.

ஒசூர் பேருந்து நிலையத்தில் குழந்தைக்கு சொட்டுமருந்தை புகட்டி முகாமைத் தொடக்கிவைத்த மேயர் எஸ்.ஏ. சத்யா.

நிகழ்ச்சியில் துணை மேயர் சி. ஆனந்தய்யா, பொது சுகாதார குழுத் தலைவர் என்.எஸ். மாதேஸ்வரன், மண்டல குழுத் தலைவர் ரவி, மாநகர நல அலுவலர் டாக்டர் அஜிதா மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

ஒகேனக்கல் முதலைப் பண்ணைப் பகுதியில்

புதிதாக கட்டப்பட்ட உடை மாற்றும் அறையை திறக்க வலியுறுத்தல்

பென்னாகரம், ஜூன் 28: ஒகேனக்கல் முதலைப் பண்ணை பகுதியில் புதிதாக கட்டப்பட்ட உடை மாற்றும் அறையை பயன்பாட்டுக்கு திறக்க வேண்டும் என சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, பென்னாகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து அமாவாசை மற்றும் வார நாள்கள் மட்டுமில்லாது இறந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வதற்காக ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வருபவர்கள் முதலைப் பண்ணை அருகே உள்ள கரையோரப் பகுதியில் ஆற்றில் குளித்துவிட்டு திறந்தவெளியில் உடை மாற்றுகின்றனர். இதில் பெண்கள் பெரும் சிரமத்தை சந்திக்கின்றனர்.

இதையடுத்து பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம் கடந்த ஆண்டு முதலைப் பண்ணை பகுதியில் உடை மாற்றும் அறை கட்டப்பட்டது. இந்த அறையானது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. இதனால் பெண்கள் உள்பட பலர் திறந்த வெளியிலேயே உடை மாற்றுகின்றனர்.

எனவே புதிதாக கட்டப்பட்ட உடை மாற்றும் அறையை பயன்பாட்டு திறந்துவிட வேண்டும் என சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு எதிராக பிரசாரம்

மூக்கண்டப்பள்ளியில் நடைபெற்ற தெருமுனை பிரசாரத்தில் பங்கேற்றோர்.

ஒசூர், ஜூன் 28: ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ரத்துசெய்து அனைவருக்கும் பணி நிரந்தரம் வழங்க தமிழக அரசு உத்தரவிட வலியுறுத்தி ஒசூர் மூக்கண்டப்பள்ளியில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி மற்றும் தமிழக தொழிலாளர் முன்னணி சார்பில் ஞாயிற்றுக்கிழமை தெருமுனை பிரசாரம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி மாவட்டச் செயலாளர் சங்கர் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தமிழக தொழிலாளர் முன்னணி சந்தோஷ், புரட்சிகர மக்கள் அதிகாரம் ஜெயராமன், மாவட்டத் தலைவர் ரவிசந்திரன், தமிழக தொழிலாளர் முன்னணி ராமமூர்த்தி, தலைமைக் குழு உறுப்பினர் தமிழ்தேச குடியரசு இயக்கம் தமிழரசன் ஆகியோர் பேசினர்.

ஒப்பந்த தொழிலாளர்களை பணி முறையை ரத்து செய்ய வேண்டும், குறைந்தபட்ச ஊதியம் ரூ. 40 ஆயிரம் வழங்க வேண்டும், உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிரந்தர பணி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் பிரசாரத்தின்போது வலியுறுத்தப்பட்டன. வெங்கடேசன் நன்றி தெரிவித்தார்.

தருமபுரியில் இரு இடங்களில் வீட்டின் பூட்டை உடைத்து 27 பவுன் நகை திருட்டு

தருமபுரி, ஜூன் 28: தருமபுரியில் இரு இடங்களில் வீடுகளின் பூட்டை உடைத்து 27 பவுன் நகைகளை திருடிய மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

தருமபுரியை அடுத்த இலக்கியம்பட்டி ஊராட்சி ராமன் நகரைச் சேர்ந்தவர் கண்ணன் (45). இவர் தருமபுரி மாவட்ட வேளாண் துறை அலுவலகத்தில் விதை பரிசோதனை ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். இவர் தனது குடும்பத்தினருடன் வெள்ளிக்கிழமை ஒடசல்பட்டியில் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தார்.

அப்போது, இரவு 10.30 மணியளவில் அவரது கைப்பேசியுடன் இணைய இணைப்பில் இருந்த வீட்டின் கண்காணிப்பு கேமரா தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதையடுத்து உடனடியாக வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டின் பூட்டுகள் உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 4 பவுன் நகைகள் திருடுபோனது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் தருமபுரி நகர போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றொரு வீட்டில் திருட்டு...

இதேபோல உங்கராண அள்ளியைச் சேர்ந்தவர் அரசகுமார் (55), தனியார் நிறுவன ஊழியர். இவர் கடந்த 25 ஆம் தேதி குடும்பத்தினருடன் தூத்துக்குடிக்கு சென்றிருந்தார். அப்போது, வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 23 பவுன் நகையை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை காலை தகவலறிந்த அரசகுமார் மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

R.M.K. COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
(AN AUTONOMOUS INSTITUTION)
TNEA Code 1128

14th Graduation Day
2025 BATCH STUDENTS
Monday, 29th June, 2026 | 10.30 am | RMKCET Auditorium

Chief Guest
Mr. Babukannan Balakrishnan
Senior Director, Silicon BU, Tech Mahindra Ltd., Bangalore
will deliver the Graduation Day Address
Vidya Ratna, Thiru. R. S. Munirathinam Ex. MLA.
Founder - Chairman, RMK Group of Institutions will preside and deliver the Presidential Address

Affiliated to Anna University, Chennai | Approved by AICTE New Delhi | Accredited by NAAC | NBA | ISO 21001 : 2018 Certified Institution
RMK GROUP OF INSTITUTIONS

ஆவின் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
செல் எண் : 8148838237 கிருஷ்ணகிரி இ-மெயில் : aavindpi@gmail.com
ந.க.எண். 5252/Mkg.2/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் : 24.06.2026

கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி நகரம் மற்றும் புற நகர பகுதிகளில் பால் விநியோகம் செய்ய 08 வாகனங்கள் மற்றும் விநியோன அபிவிருத்திக்காக 5 பேர் (4+1) பயணிக்கும் கார் ஒன்றும் இயக்கிட இரு பகுதி (Two part system) அடிப்படையில் அத்தாட்சி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2026-27-ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்கள் மற்றும் டெண்டர் படிவங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய விளக்க கூட்ட நாள் 08.07.2026, காலை 11.00 மணி. நிறைவு செய்யப்பட்ட இரு பகுதி ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் Online மூலம் பெறப்பட வேண்டிய கடைசி நாள் 16.07.2026 மாலை 03.00 மணி வரை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பகுதி 1 மட்டும் (தொழில்நுட்ப பிரிவு மட்டும்) ஒப்பந்த குழு அலுவலர்கள் முன்னிலையில் 17.07.2026 அன்று மாலை 3.45 மணி அளவில் திறக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவங்கள் மற்றும் டேணித்தொகை https://tntenders.gov.in என்ற நிர்ணயிக்கப்பட்ட வலைதள முகவரியில் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளவோ/ தள்ளி வைக்கவோ/ பிரித்து அளிக்கவோ / ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

பொது மேலாளர்,
செ.ம.தொ.இ./2148/ஒப்பந்தப்புள்ளி/2026 கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institute, Ministry of Education, Govt.of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100.

RECRUITMENT NOTIFICATION FOR ASSOCIATE PROFESSOR
NOTIFICATION No.03/CICT/Professor/2026-2027

Date: 28.06.2026

Central Institute of Classical Tamil, Chennai (CICT) invites applications from Indian Nationals, who fulfill the prescribed qualification, experience, age and other conditions as per the UGC Regulations for filling up the following posts sanctioned on regular basis, as per the details given below:-

S.No.	Name of the Post	Academic Level	No. of Post	Category	Method of Recruitment
1.	Associate Professor	Level 13A of 7th CPC as per UGC	06	UR-5 OBC-1	Direct

The details of the posts, educational qualification, age, experience and application format are available in the Institute's website **www.cict.in.** Applications complete in all aspects along with requisite application fee and all necessary documents should reach within 60 days of publication of this advertisement to "The Registrar, Central Institute of Classical Tamil, Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100".

Sd/-
Registrar

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும். வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

தர்மபுரி, பாலக்கோடு தர்மபுரி, 0120260700053457, 3490, பாப்பிரெட்டிப்பட்டி, 0116630700043287, பென்னாகரம் தர்மபுரி, 0116860700101942, 1980, 2143, 0116860730037940, 8337, கிருஷ்ணகிரி, பாலாஜிநகர், 0122960730019162, பருகூர் கிருஷ்ணகிரி, 0114950730013835, சென்னை ரோடு கிருஷ்ணகிரி, 0117410700076447, தென்கனிக்கோட்டை கிருஷ்ணகிரி, 0116830700064355, 4400, 4457, காவேரிப்பட்டினம் கிருஷ்ணகிரி, 0118440700075690, 0118440730018286, 8287, 8288, 8486, புதிய பஸ்ஸ்டாண்டு கிருஷ்ணகிரி, 0123920700054174, 0123920730015652, புதுப்பேட்டை எம் ஜி ரோடு, 0108200730020714, பழைய பேட்டை கிருஷ்ணகிரி, 0102390700802024, நாமக்கல் , எல் எம் ஆர் தியேட்டர் நாமக்கல், 0131150730020970, வடக்கு தேர் வீதி திருச்செங்கோடு, 0124610700048286, 8302, பரமத்தி, 0126410700038865, 8936, 8937, 8957, திருச்செங்கோடு நாமக்கல், 0122140700074918, வெண்ணந்தூர் நாமக்கல், 0118750700064165, சேலம், ஆட்டையம்பட்டி சேலம் , 0117910700059217, ஆத்தூர், 0119060730039418, எடப்பாடி சேலம், 0127430700041657, 1829, 1848, 0127430730022964, ஐந்து ரோடு ஜங்ஷன் சேலம், 0109070700043459, கொளத்தூர் சேலம், 0125680730057099, 7100, நங்கவள்ளி சேலம், 0119650700060226, 0287, தாரமங்கலம், 0115290700045587, விநாயகபுரம் ஆத்தூர், 0101490700069250, 9274,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் மைபனான்ஸ் குரூப்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ('ஃபண்ட்') திட்டங்களுக்கான திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றிற்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

புதிய வாடிக்கையாளர் பராமரிப்பு மையம் திறப்பு:

KFIN Technologies Limited-இன் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர் சேவை மையங்களின் முகவரிகளை முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இம்மையங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளிலிருந்து செயல்படத் தொடங்கும். சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் (Sundaram Mutual Fund) திட்டங்களுக்கான முதலீட்டாளர்களின் பரிவர்த்தனைகளை ஏற்கும் அதிகாரப்பூர்வ மையங்களாக இந்த வாடிக்கையாளர் சேவை மையங்கள் செயல்படும்.

கிளை	முகவரி	திறக்கும் நாள்
உடுப்பி	Kfin Technologies Limited கஹேல் கட்டிடம், 9-3-39C, மீன் சந்தை அருகில், பிபிசி (PPC) சாலைக்கு எதிரில், சிட்பாடி, உடுப்பி - 576101, கர்நாடகா. Email Id: mfsudipi@kfintech.com ✆ தொலைபேசி: +91 0820 7966169	29-06-2026
புஜ்	Kfin Technologies Limited 102 FF டைம் ஸ்கொயர் ஜகானிக், அனம் ரிங் ரோடு அருகில், புஜ் - 370 001, குஜராத் Email Id: mfsbhuj@kfintech.com ✆ தொலைபேசி: +91 28324 56833	01-07-2026

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தப் இணைப்பு அவ்வப்போது திருத்தப்படுகிறது.

இடம்: சென்னை
தேதி: ஜூன் 29, 2026

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆஃபீசர்

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்டஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இலவச) +91 40 2345 2215 (வெளிநாடு இந்தியாவுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

தினமணி இணையதளம்
உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
புதிய வடிவில்... புதிய வண்ணத்தில்...
www.dinamani.com

CHANGE OF NAME

I, **SANTHI PANDURANGA** (given name-SANTHI, old sur name-PANDURANGA), born on 01/06/1968 (Place of birth-VALAPAD) D/o. PALLIPATTERI APPU SUDHAKARAN resident of 9A, SAPTHAGIRI LAYOUT, TEACHERS COLONY, 3RD CROSS, HOSUR, KRISHNAGIRI - 635109, have changed my surname to **PALLIPATTERI SUDHAKARAN**, no change in given name and shall henceforth be known as **SANTHI PALLIPATTERI SUDHAKARAN**

- SANTHI PANDURANGA

BHARAT HEAVY ELECTRICALS LIMITED
Tiruchirappalli – 620014
(A Govt. of India Undertaking)

REQUIREMENT OF SUPPLIERS FOR STEEL FABRICATION AND SUPPLY OF OTHER ITEMS

BHEL, Tiruchirappalli invites new Suppliers for the following:

- Fabrication of steel items / boiler components under with BHEL material / with Vendor's material categories for various projects **(Dept.: Outsourcing - OS).**
- Supply of various items listed in BHEL website **(Dept.: Materials Management - MM).**

Full details can be downloaded from BHEL's website **https://www.bhel.com** (Tender Notifications page) against ref. No.: **NIT_100769** . Application for Supplier registration is to be submitted in Online portal by visiting **https://supplier.bhel.in** and by selecting the respective Unit.

All corrigenda / addenda / amendments/ clarifications etc. to the above will be hosted on the above websites only and will not be published in any other media. Suppliers should regularly visit the above websites to keep themselves updated.

GM / OS, 0431 – 2574242, ves@bhel.in,
GM / MM, 0431 – 2574074, pspandi@bhel.in